# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1837/10 - 2013 නොවැම්බර් මස 20 වැනි බදාදා - 2013.11.20

*1837/10 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க உள்ளூர் மருத்துவ நியதிச்சட்டம்

2013.06.18 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாண சபை கூட்டத்தில் நிறைவேற்றப்படடு 2013.10.09 ஆந் திகதி கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உள்ளூர் மருத்துவ நியதிச் சட்டம் 2012.10.25 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை இங்கு வெளிப்படுத்துகிறேன்.

ஜகத் அங்கசே,<br>
சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி,<br>
நன்நடத்தை, மகளிர் விவகாரம், சிறுவர் பாதுகாப்பு,<br>
சபை நடவடிக்கை அமைச்சர்,<br>
மேல் மாகாணம்.

சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி,<br>
நன்நடத்தை, மகளிர் விவகாரம், சிறுவர் பாதுகாப்பு, சபை<br>
நடவடிக்கை அமைச்சு,<br>
மேல் மாகாணம்,<br>
இல. 175, ஸ்டென்லி மாவத்தை,<br>
நுகேகொட,<br>
2013, ஒற்றோபர் 25.

**மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க உள்ளூர் மருத்துவ நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாம் உப அட்டவணையின் 1 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்ட உள்ளூர் மருத்துவ விடயங்கள் , விடயத்தை செயற்படுத்தி உள்ளூர் மருத்துவ முறையினை பயன்படுத்தி மேல் மாகாண மக்களின் நோய் நிவாரணம், நோய் தீர்க்கும் சேவை, சுகாதார கல்வி மற்றும், உள்ளூர் மருத்துவ மக்கள் சுகாதாரச் சேவைகளைத் தொடங்கி நடத்தி செல்லுதல், உள்ளூர் மருத்துவ விடயங்களை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல், உள்ளூர் மருத்துவ நிறுவனங்களை நிறுவுதல், நடத்தி செல்லுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்கு தேவையான வசதியளித்தலுக்காகவும், மூலிகைத் தோட்டங்களை நடத்தி செல்லுதல் மற்றும் விருத்தி செய்தலுக்காகவும் மேல் மாகாண உள்ளூர் மருத்துவ நிறுவனங்களையும், உள்ளூர் மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ளோரைப் பதிவு செய்தல், மற்றும் அவ்விடயங்களைத் தீர்மானித்து,மேற்பார்வை செய்வதற்காகவும், அது தொடர்பான மற்றும் இயைபான விடயங்களுக்காகவும், ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கான ஒரு நியதிச்சட்டமாகும். இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்துடன் இயைந்ததாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு இயற்றப்படுகின்றது.

சுருக்கப் பெயரும் அமுலுக்கு வரும் நாளும்.

1. இந்நியதிச்சட்டம் மேல் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, உள்ளூர் மருத்துவ நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்த நாட் தொடக்கம் அமுலுக்கு வரும்.

## *I* ஆம் பாகம்

### மாகாண உள்ளூர் மருத்துவத் திணைக்களத்தைத் தாபித்தல்- அதன் அமைப்பு மற்றும் பணிகள்

மாகாண உள்ளூர் மருத்துவ திணைக் களத்தைத் தாபித்தல்.

2. இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மேல் மாகாணத்தின் உள்ளூர் மருத்துவ திணைக்களம் என அழைக்கப்படும். (இங்கு இதன் பின்னர் திணைக்களம் என அழைக்கப்படும்) திணைக்களமொன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது.

மேல் மாகாண உள்ளூர் மருத்துவ ஆணையாளர்.

3. (1) இங்கு இதன் பின்னர் ..ஆணையாளர்'' எனக் குறிப்பிடப்படும் ..மேல் மாகாண உள்ளூர் மருத்துவ ஆணையாளர்,, இங்கு இரண்டாம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் திணைக்களத்தின் முதல்வராவார்.

(2) ஆணையாளருக்கு உதவியாக பிரதிஆணையாளர்களையும் சிரேஷ்ட உள்ளூர் வைத்திய உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியதான பணியாட் தொகுதியொன்று கொண்டிருத்தல் வேண்டும்.

(3) திணைக்கள அலுவலர் குழுவை நியமித்தல், இடமாற்றம் செய்தல், சேவையிருந்து நீக்குதல், அவர்களது விடய ஒழுங்கைக் கட்டுப்படுத்தல் மற்றும் வேறு நேரொத்த விடயங்கள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைச் சட்டத்தின் ஏற்பாடுகள் உரித்தாகின்றன.

திணைக்களத்தின் நோக்கங்கள்.

(4) திணைக்களத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருக்கும் :-

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் திட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம், அதன் 154 அ பிரிவின் 9 ஆம் அட்டவணையின் 1ஆம் பட்டியலின் 12 ஆம் பிரிவின் கீழ், குறிப்பிடப்பட்ட உள்ளூர் மருத்துவ வைத்தியசாலைகளைத் தாபித்தலும் நடத்திச் செல்லுதலும் உள்ளூர் மருத்துவ முறையின் படி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு தேவையான நிறுவனங்களைத் தாபித்துப் பயனுள்ளதும் திறமை மிக்கதுமான சேவைகளை நடாத்திச் செல்லுதல், அதற்காக வசதிகளை அளித்தல் மற்றும் உதவி, ஒத்தாசை வழங்குதல் ;

(ஆ) உள்ளூர் மருத்துவ முறைப்படி மேல் மாகாண மக்களின் சுகாதார நிலைமையினை விருத்திடையச் செய்வதில் நோய் தீர்க்கும் சேவை,நோய் நிவாரணம் மற்றும் சுகாதார கல்வி விடயங்களை முறையாக நடாத்திச் செல்லுதல் ;

(இ) உள்ளூர் மருத்துவ கன்றுகளைப் பாதுகாப்பதற்காக மருத்துவ பூங்காக்களைத் தாபித்து, நடாத்திச் செல்லுதல் ;

(ஈ) ஆயுர்வேத சித்த, யூனானி, உள்ளூர் பாரம்பரிய எனும் பெயர்களில் அல்லது அதன்படி பொருள் படக்கூடிய ஏதும் ஒரு மருத்துவ நிலையம், வைத்தியசாலை, மருந்தகங்கள், மசாஜ் சிகிச்சையகம் அல்லது மருத்துவ உற்பத்திசாலைகள் நிர்மாணித்தல்.

திணைக்களத்தின் பணிகள்.

5. திணைக்களத்தின் பணிகள் பின்வருமாறாகும் :-

(அ) உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் மற்றும் உள்ளூர் மருத்துவ முறைகளின்படி நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகத் தேவையான வேறு நிறுவனங்களையமைத்தல், அந்நிறுவனங்கள் ஊடாகப் பயனுள்ளதும் திறமையானதுமான உள்ளூர் மருத்துவ சேவைகளை நடாத்திச் செல்லுதல் மற்றும் பராமரித்தல் ;

(ஆ) உள்ளூர் மருத்துவ முறையின் படி மாகாணத்தின் மக்களது சுகாதாரத்தை விருத்தி செய்வதற்காக சுகாதார திட்டங்களைத் தயார்செய்து செயற்படுத்துதல்.

(இ) நோய் சிகிச்சைச் சேவைகளின் தன்மையினை மேலும் விருத்தி செய்தல் மற்றும் உள்ளூர் மருத்துவ முறைகளைப் பிரசித்தப்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகளையெடுத்தல் ;

(ஈ) உள்ளூர் மருத்துவ நிறுவனங்களில் கடமையாற்றும் பணியாளர்களுக்குத் தேவையான அறிவையும், பயிற்சியையும் பெற்றுக்கொடுத்தல் ;

(உ) தேசிய கொள்கை மற்றும் ஏற்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ப மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ விடயங்களில் ஈடுபடும் அரச அல்லது அரசசார்பல்லாத நிறுவனங்கள், அரை அரச நிறுவனங்கள் என்பவற்றையும் அரசுடன் தொடர்பான நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் அப்பணிகளைச் செய்து கொண்டுபோகையில் தொடர்பான நிறுவனங்களினால் பின்பற்றப்பட வேண்டிய வழிக்காட்டல்கள், தரங்கள், வழிமுறைகளை விதித்தல், அவற்றைச் செயற்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் விதித்தல் ;

(ஊ) மருத்துவ பூங்காக்களை ஏற்படுத்தி நடாத்திச் செல்லுதல் ;

(எ) மருத்துவ கன்றுகளைப் பயிரிடுவதற்கு ஆர்வமூட்டுதல் மற்றும் அது தொடர்பான அறிவை வளர்ச்சியுறச் செய்தல் ;

(ஏ) தேசிய கொள்கை மற்றும் ஏற்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ப மாகாணத்தினுள் மருந்துகளை உற்பத்தி செய்வதற்காக மருந்துகளை மருத்துவ வைத்தியசாலைகளுக்கண்மையில் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தி நடாத்திச் செல்லுதல் மற்றும் திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் நிறுவனங்களுக்காக மருந்துகளை விநியோகித்தல் ;

(ஐ) மாகாண மக்களின் சமூக சுகாதார சேவையினை விஸ்தரிப்பது மூலம், பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அவசர இடர்களின் போது சேவைகளை வழங்குதல் ;

(ஒ) தேசிய கொள்கைகள் மற்றும் ஏற்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ப உள்ளூர் மருத்துவ சேவைகளுக்குத் தேவையான மருத்துவ உற்பத்தியை ஆர்வமூட்டுதல் மற்றும் அதுபற்றிய அறிவை விருத்தி செய்தல் ;

(ஓ) தேசிய கொள்கைகள் மற்றும் ஏற்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ப மாகாணத்தின் உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்கும் அரச அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள், அரை அரச நிறுவனங்கள் மற்றும் அரசுடன் தொடர்பான நிறுவனங்கள் மற்றும் மருந்து உற்பத்தி செய்யப்படும் இடங்களில் பணிகள் நிறைவேற்றப்படுகின்றனவா எனப் பரிசோதித்தல் ஆலோசனை கூறுதல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல் ;

(ஔ) மாகாண மக்களின் சுகாதாரம் மற்றும் அதனை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் உள்ளூர் வைத்திய சேவைகளுடன் தொடர்பான தகவல்களை ஒன்று சேர்த்தலும் விரிவுபடுத்தலும் ;

(க) உள்ளூர் பாரம்பரிய மருத்துவ முறைகள் பற்றிய தகவல்களை ஒன்று சேர்த்தலும் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் ;

(கா) திணைக்களத்தின் பணிகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்காக அரச கொள்கைகளுக்கேற்ப அபிவிருத்திப் பணிகளுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களின் நிதி மற்றும் பொருள் உதவிகளை பெறுதல் மற்றும் அல்லது தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல் ;

(கி) தேசிய கொள்கைக்கு ஏற்ப மாகாண உள்ளூர் மருத்துவ கொள்கைளைத் தீர்மானித்தல்.

*திணைக்களத்தின் அதிகாரங்கள்.*

6. (1 )இந்நியதிச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும், அதற்குச் சாட்டப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான எல்லா அதிகாரங்கள், சட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்படத் திணைக்களத்துக்கு இருத்தல் வேண்டும்.

(2)இந்நியதிச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தகவல்கள், அட்டவணைகள் அல்லது அறிக்கைகளை ஆணையாளரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் ஒருவரினால் அரச அல்லது அரசசார்பற்ற ஏதும் உள்ளூர் நிறுவனத்திலிருந்து அல்லது நபரொருவரிடமிருந்து கேட்கப்பட்டால் அந்நிறுவனம் அல்லது நபர் அத்தகவல்களை, அட்டவணைகளை அல்லது அறிக்கைகளை வழங்குவதற்குக் கட்டுப்பட்டவராவார்.

*II ஆம் பாகம்*

**உள்ளூர் மருத்துவ நிறுவனங்கள்**

*உள்ளூர் மருத்துவ நிறுவனங்களைப் பதிவு செய்தல்.*

7. (1)எவரேனும் ஒருவர் மாகாண விடயப்பொறுப்பு அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் ஓர் அறிவித்தல் மூலம் விதிக்கப்படும் ஒரு நாளில் அல்லது அதற்குப் பின்னர் :-

(அ) ஆணையாளரினால் வழங்கப்படும் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் மூலம் உள்ளூர் மருத்துவ நிறுவனமொன்றை நடாத்திச் செல்வதற்காகக் குறிப்பிடப்பட்ட அந்நபருக்கு அதிகாரமளிக்கப்பட்டு இருந்தாலொழிய ; மற்றும்

(ஆ) ஏதும் ஓர் இடத்தை உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்கும் நிறுவனமாக நடாத்திச் செல்வதற்காக அடையாளம் காணப்பட்ட இடமாக ஆணையாளரிடம் ஏக காலத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தாலொழிய எந்தவொரு உள்ளூர் மருத்துவ நிறுவனமொன்றை மாகாணத்தினுள் நடாத்திச் செல்லுதல் அல்லது செயற்படுத்துதல் செய்யப்படக்கூடாது ;

(இ) இந்நியதிச்சட்டம் அமுல்படுத்தப்படும் நாளுக்கு முன்னர் தொடக்கப்பட்டு 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு நடாத்திச் செல்லப்படும், மேல் மாகாணத்தினுள் இயங்கும் எல்லா அரச அல்லது அரசசார்பற்ற நிறுவனமொன்று, அரை அரச நிறுவனமொன்று மற்றும் அரசுடன் தொடர்பான நிறுவனமும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) பதிவு 2 பஞ்சாங்க ஆண்டுகளுக்கு மட்டும் வலிவுடையதாக இருக்கும்.

*பதிவு செய்யப் படும் உள்ளூர் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக ஆணையாளரின் அதிகாரங்களும் கடமைகளும்.*

(2) (அ) பதிவு செய்யப்படும் உள்ளூர் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக ஆணையாளரின் அதிகாரங்களும் கடமைகளும் ;

(ஆ) ஆணையாளரினால் மேலே (2) ஆம் அட்டவணையின் (அ) பிரிவின் கீழ் விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதுதொடர்பாக அவதானிப்புக்கள் உட்படுத்தப்பட்ட அறிக்கையொன்றை வழங்குமாறு தொடர்பான பிரதேச செயலாளர் பிரிவினுள் பொறுப்பான ஆயுர்வேத மக்கள் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும் ;

(இ) 2 ஆம் உப விதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டஆணையாளரின் அக்குறிப்பிடப்பட்ட அறிவித்தல் திகதி தொடக்கம் அறுபது (60) நாட்களுக்குள் தொடர்பான பிரதேச செயலாளர் பிரிவினுள் பொறுப்பான ஆயுர்வேத மக்கள் சுகாதார வைத்திய அதிகாரியினால் தனது அவதானிப்புக்கள் அடங்கிய அறிக்கையொன்றை மாகாண ஆணையாளருக்கு வழங்குதல் வேண்டும் ;

(ஈ) மாகாண ஆணையாளரினால் தொடர்பான அவதானிப்பு அறிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்ததன் பின்னர் –

(i) உள்ளூர் மருத்துவ நிறுவனத்தை பதிவு செய்து விண்ணப்பதாரருக்கு பதிவு சான்றிதழொன்றை வழங்கி அவ்விடம் தொடர்பான உள்ளூர் மருத்துவ நிறுவனத்தை நடாத்திச் செல்ல வேண்டிய இடமாக பதிவு செய்வதற்கு ; அல்லது

(ii) நியதிச்சட்டத்தின் கீழ் உள்ளூர் மருத்துவ நிறுவனங்களாகப் பதிவு செய்தல் தொடர்பாக விதிக்கப்படும் பிரமாணங்கள்/விதிகளுக்கு இணங்காத விண்ணப்பப்பத்திரங்களை நிராகரித்து அதனைப்பற்றி விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் ;

(iii) மேலே (ii) ஆம் உப பிரிவின் கீழ் பதிவு செய்தல் நிராகரிக்கப்படுவதற்கான காரணத்தை அறுபது (60) நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(உ) (i) விண்ணப்பப்பத்திரத்தை நிராகரிக்கும் ஆணையாளரின் முடிவு தொடர்பாக திருப்தியுறாத விண்ணப்பதாரியொருவரினால் அத்தீர்மானத்தை அறிவித்த நாட்தொடக்கம் இருபத்தியொரு (21) நாட்களுக்குள் அத்தீர்மானத்துக்கெதிராகச் செயலாளரிடம் மேன்முறையீடு செய்ய முடியும்.

(ii) செயலாளரினால் குறிப்பிடப்பட்ட அம்மேன்முறையீடு தனக்கு கிடைத்து (60) நாட்களுக்குள் தன் முடிவை விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஊ) பதிவுக் கட்டணம், மாகாண விடயப்பொறுப்பு அமைச்சரினால் விதிக்கப்படும் விதிகள் மூலம் விதிக்கப்படுதல் வேண்டும்.

8. (1) ஆணையாளரினால் அவ்வாறு செய்தல் தேவையென்று கருதப்படும் போது இந்நியதிச்சட்டத்தின் கீழான விடயங்களையும் கருமங்களையும் நிறைவேற்றுதல், அவரால் நியமிக்கப்படும் எவரேனும் அலுவலர் ஒருவருக்கு அல்லது ஏதும் குழுவொன்றுக்கு பொறுப்பளிக்கக் கூடுமென்பதுடன் குறிப்பிட்ட அவ்விதிகள் அல்லது குழுவினால் அக்கருமங்களையும் விடயங்களையும் ஆணையாளரின் பொதுவான அல்லது விசேட கட்டளையின் கீழ் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) சட்டத்தின் பொதுவான கட்டுப்பாடுகளின் கீழ் ஆணையாளரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்ற எவரேனும் ஒருவரினால், இந்நியதிச்சட்டத்தின் 7 (2) (இ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கருமத்துக்காக மற்றும் / அல்லது 7 (2) (ஈ) உப பந்தியின் கீழ் உள்ளூர் மருத்துவ நிறுவனமொன்றாகும். பதிவு செய்த ஏதும் ஒரு நிறுவனத்துக்கு அல்லது இடத்துக்குத் தேவையான வேண்டியதொரு நேரத்தில் உட்பிரவேசித்து-

(அ) அவ்விடத்தை பரிசோதிப்பதற்கு ;

(ஆ) அங்கிருக்கும் எவரேனும் ஒருவரிடம் அல்லது நோயாளியிடம் விடயங்களை விசாரிப்பதற்கு ;

(இ) அதனுள் நடாத்தப்படும் ஏதும் ஆவணங்கள் அல்லது அறிக்கைகளைப் பரிசீலிப்பதற்கும் அவ்வாவணங்களின் அல்லது அறிக்கையின் பிரதிகளையெடுப்பதற்கு ;

(ஈ) அவ்விடத்தின் உரிமையாளருக்கும் /அல்லது பொறுப்பாக இருக்கும் எவரேனும் நபர் தொடர்பாக இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் விதிக்கப்படும் விதிகள் அல்லது பிரமாணங்களின் படி செயற்படுவதற்கு ஆலோசனைகள் அல்லது கட்டளைகளை விடுப்பதற்கு அதிகாரம் கொண்டவராவார்.

9. இந்நியதிச்சட்டத்தின் கீழ் விடயங்களை அல்லது கருமங்களை நிறைவேற்றுகையில் ஆணையாளரினால் பொலிசாரின் உதவியைக் கேட்டால் அவ்வுதவியை பொலிசார் வழங்குதல் வேண்டும்.

## *III* ஆம் பாகம்

### உள்ளூர் மருத்துவ சேவை வழங்குவோர்

உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்குபவர்களை பதிவு செய்தல்.

10. அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்று மூலம் விதிக்கப்படும் திகதியொன்றில் குறிப்பிட்ட அந்நபர் ஆணையாளரிடம் அப்போதுஉள்ளூர் மருத்துவ சேவைகள் வழங்குபவராகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய மேல் மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ சேவைகள் வழங்குபவராக எந்தவொரு நபரும் செயற்படுதலாகாது.

11.(1) உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்குபவர் தொடர்பான பதிவேட்டில் பதிவு செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் எழுத்துருவில் மற்றும் உரிய முறையில் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) உள்ளூர் மருத்துவச் சேவை வழங்குபவராக மேற்கொள்ளப்பட்ட ஏதும் பதிவொன்று, ஆணையாளரினால் இரத்து செய்யப்பட்ட நபரொருவருக்குப் பதிவுசெய்து கொள்ளப்படுவதற்காக மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

12. (1) ஆணையாளரினால் கீழ் காணப்படும் உள்ளூர் மருத்துவச் சேவை வழங்குபவர்களை அதாவது :-

(அ) உள்ளூர் மருத்துவ மருந்துகளை வழங்குபவர்கள் ;

(ஆ) உள்ளூர் மருத்துவ பரிசோதகர் ;

(இ) உள்ளூர் மருத்துவ மர்த்தனர் .

பதிவு செய்வதற்காகத் தனித்தனியான பதிவுகளை நடத்திச்செல்லுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்ட பதிவேடுகளைச் சரியான முறையில் வைத்துக்கொள்வதும் பேணிவருதலும் ஆணையாளரின் பொறுப்பாகும்.

உள்ளூர் மருத்துவச் சேவைகளை வழங்குபவர் ஒருவர் பதிவு செய்து கொள்வதற்கு தேவையான தகைமைகள்.

13. எவரேனும் ஒருவர் -

(1) இலங்கை பிரசையாக இருப்பின் ;

(2) ஆணையாளரினால் ஏற்கப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்பான களத்தில் கற்கைப் பாடநெறியொன்றைப் பின்பற்றியதன் பின்னர் அந்நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பின் ; அத்துடன்

(3) சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி உள்ளூர் மருத்துவப் பராமரிப்புச்சேவை உள்ளூர் மருத்துவ மருந்துகளை வழங்குதல், உள்ளூர் மருத்துவ பரிசோதகர், உள்ளூர் மருத்துவ பஞ்சகர்ம சிகிச்சை எனும் கண்ணியத் தொழில்களில் திறமையுடன் ஈடுபடுவதில் போதிய அறிவு மற்றும் அனுபவம் கொண்ட ஒருவர் என ஆணையாளர் திருப்திப்படுபவரென்றால் ஒழிய உள்ளூர் மருத்துவச் சேவைகளை வழங்கும் ஒருவராக பதிவு செய்யப்படுவதற்கு உரிமை கிடைக்க மாட்டார்.

உள்ளூர் மருத்துவச் சேவைகளை வழங்குபவராக பதிவு செய்தல் அல்லது நிராகரித்தல்.

14. 11 (1) உப பிரிவின் கீழ் உள்ளூர் மருத்துவச் சேவைகளில் ஈடுபடுபவராகப் பதிவுசெய்து கொள்வதற்காக விண்ணப்பமொன்று கிடைத்ததன் பின்னர்-

(1) இந்நியதிச்சட்டத்தின் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட விதிகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளபடி விதிக்கப்பட்ட தகைமைகளைப் பூரணப்படுத்தியிருப்பின் உள்ளூர் மருத்துவச் சேவைகளை வழங்குபவராகப் பதிவுசெய்து விண்ணப்பதாரருக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கு; அல்லது

(2) நியதிச்சட்டத்தின் கீழ் உள்ளூர் மருத்துவச் சேவைகளை வழங்குபவராகப் பதிவுசெய்தல் தொடர்பாக விதிக்கப்படும் விதிகளுக்கு ஏற்புடையதாக மற்றும் தகைமைகளைப் பூரணப்படுத்தியிராத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை நிராகரித்து அதனைப்பற்றி விண்ணப்பதாரருக்கு எழுத்துருவில் அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும் ;

(3) 14 (2) ஆம் உப பிரிவின் கீழ் பதிவு செய்வதனை நிராகரிப்பதற்கான காரணத்தை முப்பது (30) நாட்களுக்குள் தொடர்பான விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

பதிவு செய்தல், மறுத்தல், இரத்துச் செய்தல் அல்லது இடை நிறுத்துவதற்கான காரணங்கள்.

15. எவரேனும் உள்ளூர் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் அத்தகைய சேவைகளை வழங்கும் ஒருவரின் அந்தஸ்திலிருந்து எவையேனும் பொருத்தமற்ற நடத்தை பற்றிக் குற்றச்சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்ட ஏதும் குற்றம் ஒன்றுக்கு உரிய நீதி அதிகாரமுள்ள நீதிமன்றம் மூலம் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில், ஆணையாளரினால் குறிப்பிட்ட அச்சேவை வழங்குவதைப் பதிவு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிராகரித்தல் அல்லது அத்தகைய பதிவு செய்தலொன்றை இரத்துச்செய்தல் கூடாது.

16. பதிவை பெற்ற எல்லா உள்ளூர் மருத்துவச் சேவையில் ஈடுபடுபவர்களும் அச்சேவைகளில் ஈடுபடுபவர் இந்நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதும் ஒரு துறை தொடர்பாகவென்றால், அத்துறையில் மாகாணத்தில் உயர் தொழிலில் ஈடுபடுவதற்கு உரிமையுண்டு.

*பதிவு செய்யப்பட்ட உள்ளூர் மருத்துவச் சேவை வகைகளை வழங்குபவர் களுக்குத் தொழிலில் ஈடுபடுவதற்கு உரிமையுள்ளவர்கள் என்பது.*

17.(1)எவரேனும் ஒருவரினால், ஒருவரை சந்தர்ப்பத்துக்கேற்ப உள்ளூர் மருத்துவ மருந்துகளை வழங்குபவராக, பரிசோதகராக, மர்த்தனர்.

(2) உள்ளூர் மருத்துவ நிறுவனமொன்றில் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரினால் அந்த உள்ளூர் மருத்துவ நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து பணியாளர் குழுவின் உறுப்பினர்களின் பெயர்களை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்குகொரு முறையும் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

18. (1) 14(2) ஆம் உபபிரிவின் கீழ் விண்ணப்பப் படிவத்தை புறக்கணிக்கும் ஆணையாளரின் தீர்மானம் தொடர்பாக அதிருப்தியுற்ற விண்ணப்பதாரர் ஒருவரினால் குறிப்பிட்ட அம்முடிவு அறிவிக்கப்பட்ட நாள் தொடக்கம் இருபத்தியொரு (21) நாட்களுக்குள் அத்தீர்மானத்துக்கெதிராகச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்தல் வேண்டும்.

*பதிவு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக மேன்முறையீடு செய்தல்.*

(2) செயலாளரினால் அம்மேன்முறையீடு தனக்குக் கிடைத்தது தொடக்கம் முப்பது (30) நாட்களுக்குள் தமது முடிவை விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

19. (1)எவரேனும் ஒருவரினால் அதற்காகச் சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையாளரின் எழுத்துருவிலான அனுமதி பெற்றுக் கொண்டிருந்தாலொழிய ..ஆயுர்வேதம்'', ..சித்தம்'', ..யூனானி,,, ..பாரம்பரிய வைத்தியம்'' எனும் பதங்களைப் பாவிக்கக்கூடாது.

*உள்ளூர் மருத்துவத்தின் கீழ்வரும் 'ஆயுர்வேதம்', 'சித்தம்', 'யூனானி' 'பாரம்பரிய வைத்தியம், எனும் பதங்களைப் பாவித்தல்.*

(2)(1) ஆம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட..ஆயுர்வேதம்'', ..சித்தம்'', ..யூனானி,,, ..பாரம்பரிய வைத்தியம்'' எனும் பதங்களைப் பாவித்தல் என்பது.

(அ) ஏதும் பதவிப்பெயருக்கு அல்லது பெயரொன்றுக்கு முன்னர் ;

(ஆ) பெயர்ப் பலகையொன்றின் மீது அல்லது அடையாளப் பலகையொன்றின் மீது;

(இ) இலத்திரனியல் அல்லது அச்சிடப்பட்ட ஊடகமொன்றினூடாக ஏதும் வர்த்தக பிரச்சார அறிவித்தலொன்றில் அல்லது ;

(ஈ) ஏதும் அறிவித்தலொன்றில், பெயர்ப் பலகையில் /விவரப் படிவத்தில், படிவத்தில் அல்லது வேறு எழுத்துருவிலான ஊடகமொன்றில் அப்பதத்தைப் பயன்படுத்தல் அல்லது அறிமுகப்படுத்துதல் உள்ளடங்கும்.

## IV ஆம் பாகம்

## தவறுகளும், தண்டணைகளும்

20.7(1) ஆம் உபபிரிவின் கீழ் பதிவு செய்யப்படாமல் உள்ளூர் மருத்துவ நிறுவனமொன்றை நடாத்திச்செல்லும் ஒருவர் தவறொன்றுக்குத் தவறாளியாவதுடன், நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணையொன்றில் தவறாளியாக்கப்பட்டால் ரூபா இரண்டு இலட்சத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு அல்லது ஆறு (6) மாதத்துக்கு மேற்படாத சிறைப்படுத்தப்படுதல் எனும் இரு தண்டணைகளுக்கும் உள்ளாதல் வேண்டும்.

21.10(1) ஆம் உபபிரிவின் கீழ் பதிவு செய்தல் இன்றி உள்ளூர் மருத்துவ சேவை வழங்குனர் ஒருவராக பணிபுரியும் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாவதுடன் நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணையொன்றில் தவறாளியாக்கப்பட்டால் ரூபா ஐம்பதாயிரத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு அல்லது ஆறு (6) மாதத்துக்கு மேற்படாத சிறைப்படுத்தப்படுதல் எனும் இரு தண்டணைகளுக்கும் உள்ளாதல் வேண்டும்.

22. இந்நியதிச்சட்டத்தின் 7(2)ம் பந்தி 8(1)ம் பிரிவுகளின் கீழ் விதிக்கப்பட்ட ஏதும் பொதுவான அல்லது விசேட அதிகாரத்தின் கீழ் செயற்படும் எவரேனும் அனுமதியளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் செயற்பாடுகளுக்கு நியாயமான அல்லது ஏற்கப்படத்தக்க காரணமின்றி கீழ்ப்படியாத அல்லது நடைமுறைப்படுத்தும் அல்லது நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை மீறும் எவரேனும் ஒருவர் தவறொன்றுக்குத் குற்றவாளியாவதுடன், நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணையொன்றில் தவறாளியாக்கப்பட்டால் ரூபா ஐயாயிரத்துக்குக் குறையாத ரூபா இருபத்தி ஐயாயிரத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு அல்லது ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத சிறைப்படுத்தப்படுதல் எனும் இரு தண்டணைகளுக்கும் உள்ளாதல் வேண்டும்.

23.17(1) மற்றும் /அல்லது (2)ம் உபபிரிவுகளின் ஏற்பாடுகளை மீறும் எவரேனும் ஒருவர் தவறொன்றுக்குத் தவறாளியாவதுடன், நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணையொன்றில் தவறாளியாக்கப்பட்டால் ரூபா இரண்டு இலட்சத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு அல்லது 12 மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்குச் சிறைக்குட்படுத்தப் படுவதற்கு அல்லது குறிப்பிட்ட தண்டம் மற்றும் சிறைப்படுத்தப்படுதல் எனும் இரு தண்டணைகளுக்கும் உள்ளாதல் வேண்டும்.

24. எவரேனும் ஒருவர் இந்நியதிச்சட்டத்தின் 10(1) உபபிரிவின் கீழ் பதிவு செய்யாமல் உள்ளூர் மருத்துவ மருந்து வழங்குபவராக, உள்ளூர் மருத்துவராக-

(1) உள்ளூர் மருத்துவ மருந்து வழங்குபவர், உள்ளூர் மருத்துவ பரிசாரகர் எனும் பதவிப்பெயர்களினால் ஆங்கிலமொழியில் அல்லது அதற்குச் சமமான வேறு ஒரு மொழியில் தனியாக அல்லது வேறு சொற்கள் அல்லது எழுத்துக்களுடன் பயன்படுத்துதல் அல்லது

(2) தான் பதிவுசெய்யப்பட்ட உள்ளூர் மருத்துவ மருந்துகள் வழங்குபவராக, பதிவுசெய்யப்பட்ட உள்ளூர் மருத்துவ பரிசோதகர் அல்லது பதிவுசெய்யப்பட்ட உள்ளூர் மருத்துவ மர்த்தனர் ஆக உட்கிடையாக விளங்கவைக்கும் ஏதும் ஒரு பெயரை பதவிப் பெயரை சேர்த்தல் அல்லது விபரமொன்றைப் பாவித்தல் அல்லது

(3) உள்ளூர் மருத்துவ மருந்து வழங்குபவராக, உள்ளூர் மருத்துவ பரிசாரகர் அல்லது உள்ளூர் மருத்துவ பஞ்சகர்ம சிகிச்சையாளர் அல்லது மர்த்தனர் ஆக போலியாக காண்பித்துக் கொண்டு தனது நன்மைக்காகத் தொழிலில் ஈடுபடுவது அல்லது சிகிச்சையளிப்பது

போன்றவற்றைச் செய்யும் ஒருவர் தவறொன்று புரிவதுடன், நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணையொன்றில் தவறாளியாக்கப்பட்டால் ரூபா இரண்டு இலட்சத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு அல்லது ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்குச் சிறைக்குட்படுத்தப்படுவதற்கு அல்லது குறிப்பிட்ட தண்டம் மற்றும் சிறைப்படுத்தப் படுதல் எனும் இரு தண்டணைகளுக்கும் உள்ளாதல் வேண்டும்.

25.19(1) உபபிரிவின் கீழ் ஏதும் ஏற்பாடொன்றை மீறும் எவரேனும் ஒருவர் தவறொன்றுக்குத் தவறாளியாவதுடன், நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணையொன்றில் தவறாளியாக்கப்பட்டால் ரூபா ஒரு இலட்சத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு அல்லது ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்குச் சிறைக்குட்படுத்தப்படுவதற்கு அல்லது குறிப்பிட்ட தண்டம் மற்றும் சிறைப்படுத்தப்படுதல் எனும் இரு தண்டணைகளுக்கும் உள்ளாதல் வேண்டும்.

## V ஆம் பாகம்

## மாகாண உள்ளூர் மருத்துவச் சேவைகள் ஆலோசனைச் சபை

மாகாண உள்ளூர் மருத்துவச் சேவைகள் ஆலோசனைச் சபை.

26. மாகாண உள்ளூர் மருத்துவச் சேவைகள் ஏற்பாட்டு அமைப்பு மற்றும் அமுல் நடத்துதல் தொடர்பாக மாகாண உள்ளூர் மருத்துவச் சேவைகள்ஆலோசனைச் சபையொன்று அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

மாகாண உள்ளூர் மருத்துவச் சேவைகள் ஆலோசனைச் சபையின் அமைப்பு.

27. (1) மாகாண உள்ளூர் மருத்துவச் சேவைகள் ஆலோசனைச் சபை (இதன் பின்னர் ஆலோசனைச் சபை என அழைக்கப்படும்) கீழ் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) செயலாளர் ;

(ஆ) ஆணையாளர் ;

(இ) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் ;

(ஈ) கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்கள் மூன்றையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தகைமைப் பெற்ற அரச துறையல்லாத பிரபல உள்ளூர் மருத்துவ விற்பன்னர்கள்/மருத்துவர்கள் மூவர் ;

(உ) உள்ளூர் மருத்துவத் துறையும், சமூகமும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்படும்.

(2) விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளர் பதவி வழியாகவே ஆலோசனைச் சபையின் தலைவராவதுடன், ஆணையாளர் அதன் செயலாளர் ஆவார்.

(3) மேலே (1) ஆம் உபபிரிவின் (அ), (ஆ), (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் பதவி வழியாகவே நியமிக்கப்படுவர்.

(4) (அ) ஆலோசனைச் சபையின் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று (3) ஆண்டுகளாகும் ;

(ஆ) இராஜினாமாச் செய்தல், இறந்துபோதல், விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது வேறு விதத்தில் பதவியை வெற்றிடமாக்குவதால், ஏற்கெனவே பதவி வெற்றிடமானால் ஒழிய எல்லா நியமிக்கப்பட்ட உறுப்பினரும் நியமிக்கப்பட்ட

நாட்தொடக்கம் மூன்று (3) ஆண்டுக் காலம் பதவி வகிப்பதுடன், மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியானவராவார் ;

(இ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறந்துபோவதால், இராஜினாமாச் செய்வதால், அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் அல்லது வேறு விதத்தில் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அமைச்சரினால் அவ்வுறுப்பினரின் எஞ்சியுள்ள காலத்துக்காக வேறு பொருத்தமான உறுப்பினர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(5) 27 (1) ஈ, உ பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அமைச்சரினால் பதவியிலிருந்து விலக்கப்படலாம்.

(6) 27 (1) (இ), (ஈ) பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவருவருக்கு அமைச்சரை விளித்து அனுப்பப்படும் கடிதம் மூலம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனது பதவியிலிருந்து விலகமுடியும்.

(7) ஆகக் குறைந்தது மூன்று(3) மாதங்களுக்கொரு முறை ஆலோசனைச் சபை கூடுதல் வேண்டும்.

(8) ஆலோசனைச் சபையின் கோரும் உறுப்பினர்கள் 4 பேர்களாக இருத்தல் வேண்டும்.

ஆலோசனைச் சபையின் பணிகள்.

28.ஆலோசனைச் சபைக்கு அனுப்பப்படும் விடயங்கள் தொடர்பாக விடயப்பொறுப்பு அமைச்சருக்குப் பொருத்தமான விதத்தில் அவதானிப்புக்கள், விதந்துரைகள், ஆலோசனைகள் சமர்ப்பித்தல், மாகாண உள்ளூர் மருத்துவத் திணைக்களத்தின் சேவைகளை மேம்படுத்துதல், மாகாண சுகாதார நிலைமையினை அபிவிருத்தி செய்தல் எனும் விடயங்கள் பற்றி அடிக்கடி விதந்துரைகளையும் /அல்லது ஆலோசனைகளைச் சமர்ப்பித்தல் அவ் ஆலோசனைச் சபையின் பணிகளாகும்.

## VI ஆம் பாகம்

### வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்கள்

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களைத் தாபித்தலும் அவற்றின் அமைப்பு.

29. (1)மாகாணத்தில் உள்ள உள்ளூர் மருத்துவ சுகாதார ஆஸ்பத்திரிகள், உள்ளூர் மருத்துவ மத்திய மருத்துவ மனைகள் மற்றும் வேறும் மருத்துவ நிலையங்களுக்காக வைத்தியசாலை கமிட்டிகளின் (இதன் பின்னர் "கமிட்டி" என அழைக்கப்படும்) செயலாளரினால் நியமிக்கப்படமுடியும்.

(2) மேலே (1) உப பிரிவின் கீழ் நிறுவப்படும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் அமைப்பு பின்வரும் வகையில் இருத்தல் வேண்டும்.

(அ) தொடர்பான பிரிவின் பிரதேசச் செயலாளர் அல்லது அவரின் பிரதியொருவர்

(ஆ) நிறுவனத்துக்குப் பொறுப்பான மருத்துவ அலுவலகம் ;

(இ) தொடர்பான நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் சுயேச்சை நிறுவனங்களின்பிரதிநிதிகள் ;

(ஈ) பிரதேசத்தில் காணப்படும் பதிவுசெய்யப்பட்ட உள்ளூர் மருத்துவர்கள் ;

(உ) மதகுருமார் பிரதிநிதித்துவப் படத்தக்க வகையில் அங்கத்தவர்கள்;

(ஊ) வைத்தியசாலைப் பணியாளர்களின் பிரதிநிதிகள்;

(எ) ஸ்தாபனத்தின் அபிவிருத்திக்காக நடைமுறை பங்களிப்பை வழங்கக் கூடிய நபர்கள்.

(3). இல் இ, ஈ, உ, எ பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்கள் விடயப்பொறுப்பு அமைச்சரின் சம்மதத்துடன் நியமிக்கப்பட வேண்டியதுடன் அந்தந்த பந்திகளுக்கு இணங்க நியமிக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை தாபனத்தின் வகைப்படுத்தலுக்கு இணங்க அமைச்சரினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(4). வைத்தியசாலைக் குழுவினால் சிபாரிசு செய்யப்படும் மூன்று அங்கத்தவர்களில் இருந்து அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் நபர் ஒருவர் இக்குழுவின் தவிசாளராக வேண்டியதுடன் ஸ்தாபனத்துக்கு பொறுப்பாகவைத்திய உத்தியோகத்தர் பதவி நிலையில் இக்குழுவின் செயலாளராக வேண்டும்.

(5). (அ) இக்குழுவின் பதவிக்காலம் இரண்டு (2) ஆண்டுகளாகும்.

(ஆ) மேலே உபபந்தியில் (இ),(ஈ),(உ) பந்திகளின் கீழ் விடயப்பொறுப்பு அமைச்சரின் இணக்கத்துடன் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஏதுமொரு காரணத்துக்காகக் குறிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் வெற்றிடமானால், அந்த வெற்றிடமான பதவிக்காகவேறு ஒருவரைஅந்தப் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நியமித்த விடயப்பொறுப்பு அமைச்சரின் இணக்கத்துடன் செய்யப்படலாம். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவருக்குத் தமக்கு முன் இருந்த உறுப்பினரின்பதவிக்காலத்தில் முடியாத பதவிக்காலத்துக்காக மட்டும் பதவி வகிக்கலாம்.

(இ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பதவியில் இருந்து அகற்றும் அதிகாரம் விடயப்பொறுப்பு அமைச்சருக்கு உண்டு. எந்தவொரு நியமிக்கப்பட்ட உறுப்பினருக்குத் தமது பதவியிலிருந்து விலகுவதற்கு உரிமையுண்டு.

(ஈ) வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் கோரம் ஏழாக (7) இருத்தல் வேண்டும்.

*வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் பணிகள்.*

*30. 29* ஆம் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் பணிகள் கீழ் வருமாறு இருத்தல் வேண்டும்.

(1) குறிப்பிட்ட நிறுவனம் மற்றும் பொது மக்களிடையே இணைப்பை ஏற்படுத்துதல்.
(2) நிறுவன அபிவிருத்தி மற்றும் நலன்புரி விடயங்களைச் செயற்படுத்துதல்.
(3) சேவை பெறுபவர்களுக்கு நிறுவனத்தின் மூலம் தரமான சேவையினை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்தல்.

*31.(1)* தொடர்பான குழு மாதமொரு முறை கூட வேண்டியதுடன் குழுவின் அறிக்கையின் பிரதிகள் அமைச்சுச் செயலாளருக்கும் ஆணையாளருக்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழு உறுப்பினர் அல்லது அவரது/அவளது தாரம் உட்படக் குடும்பத்தின் எவரும் மாகாணத்தின் உள்ளூர் மருத்துவர் வைத்தியசாலையுடன் எந்தவொரு ஒப்பந்தம் அல்லது வழங்குதல் அல்லது வேறு தொடர்புகள் வைத்துக் கொள்ளுதல் கூடாது.

(3) தமது பணிகளை நிறைவேற்றுவதில் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் அங்கத்தவர்கள் தமது குழு உறுப்புரிமையின் மீது தகாத செல்வாக்கை பிரயோகித்தல் செய்யக்கூடாது.

*VII ஆம் பாகம்*

**பொது ஏற்பாடுகள்**

*அமைச்சரினால் விதிகள் ஆக்கப் பட முடியும் என்பது.*

*32.(1)*விடயப்பொறுப்பு அமைச்சரினால் பின்வரும் விடயங்களுக்காக விதிகளைச் செய்தல் வேண்டும்.

(அ) மேல் மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ நிறுவனங்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் ;

(ஆ) மேல் மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ நிறுவனங்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணங்கள் ;

(இ) எவரேனும் ஒருவர் உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்குபவராக பதிவு செய்து கொள்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய நடைமுறை ;

(ஈ) எவரேனும் ஒருவர் உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்குபவராக பதிவு செய்து கொள்வதற்குத் தேவையான தகைமைகள் ;

(உ) மேல் மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ நிறுவனங்களாகப் பதிவு செய்து கொள்வதற்காகப் பாவிக்க வேண்டிய ஆவணங்கள், படிவங்கள் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவதற்காகப் பயன்படுத்தப்படும் மாதிரிப் படிவங்கள் ;

(ஊ) மேல் மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ நிறுவனங்களாகப் பதிவு செய்து கொள்ளுதல் மற்றும் அதற்காக வழங்கப்படும் அனுமதி வலிதுடையதாக இருக்கும் காலப்பிரிவு ;

(எ) மேல் மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ சேவைகளை வழங்கும் ஒருவராகப் பதிவு செய்து கொள்ளுதல், நிராகரித்தல் அல்லது இரத்துச் செய்தல், பதிவைப் புதுப்பித்தல் நிராகரிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ;

(ஏ) மேல் மாகாணத்தினுள் உள்ளூர் மருத்துவ நிறுவனங்களை வழங்கும் ஒருவராகப் பதிவு செய்து கொள்ளுதல், நிராகரித்தல் அல்லது இரத்துச் செய்தல், பதிவைப் புதுப்பித்தல் நிராகரிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ;

(ஒ) வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவை ஸ்தாபித்தலும் அதன் அமைப்பினைத் தீர்மானித்தலும் ;

(ஐ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான வேறு எந்த விடயமும்.

(2) 32 (1) ஆம் உப பிரிவின் கீழ் ஆக்கப்படும் எல்லா விதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்படும் நாட்தொடக்கம் அல்லது அவ்விதியில் குறிப்பாகத் தெரிவிக்கப்படக்கூடிய பின்னொரு நாளில் இருந்து அது செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) (1) ஆம் உப பிரிவின் கீழ் விதிக்கப்படும் எல்லாக் கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் அங்கீகாரத்துக்காக மாகாண சபைக்குச் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத எல்லா விதிகளும், அதன்கீழ் ஏற்கெனவே செய்யப்பட்ட எவற்றுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் குறிப்பிட்ட அங்கீகரிப்புத் தினத்திலிருந்து இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதும் விதியொன்று இரத்துச் செய்யப்பட்ட திகதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

33. இந்நியதிச் சட்டத்தின் கீழான கடமைகள், கருமங்கள் மற்றும் அதிகாரங்கள், செயலாளரின் மேற்பார்வைக்கும், பரிசோதனைக்கும் மற்றும் ஏற்பாடுகளுக்கும் அமைய ஆணையாளரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும். செயலாளரின் கடமைகள்.

34. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் பதங்களுக்கிடையில் ஏதும் வேறுபாடு ஏற்பட்டால் அப்போது சிங்களமொழிப் பதம் வலிதுடையதாக இருத்தல் வேண்டும். வேறுபாடுகள் ஏற்பட்டபோது சிங்களமொழிப் பதம் வலிதுடையதாக இருத்தல்.

35. பதங்கள் தொடர்பாக வேறு அர்த்தம் தேவைப்பட்டால் ஒழிய இந்நியதிச் சட்டத்தில் பொருள்கோடல்.

"மாகாணம் " என்பது இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தையும்.

"மாகாண சபை" என்பது மேல் மாகாணத்தின் மாகாண சபையையும்.

"ஆளுநர்" என்பது மேல் மாகாணத்தின் ஆளுநரையும்.

"விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்" என்பது மேல் மாகாணத்தின் மாகாணசபையின் உள்ளூர் மருத்துவ விடயம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அமைச்சரும்.

"செயலாளர்" என்பது உள்ளூர் மருத்துவ விடயம் பொறுப்பான மாகாண அமைச்சின் செயலாளரையும்.

"ஆணையாளர்" என்பது மேல் மாகாண சபையின் உளளூர் மருத்துவ திணைக்களத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள உள்ளூர் மருத்துவ ஆணையாளரையும்.

"நபர்" என்பது எவரேனும் ஆள், உள்ளூர் மருத்துவ நிறுவனம் அல்லது கம்பெனியையும்.

"உள்ளூர் மருத்துவம்" என்பது இலங்கையின் உள்ளூர் பாரம்பரிய மருத்துவம், எட்டு அம்ச ஆயுர்வேதம், சித்த யூனானி அல்லது இலங்கையினுள் முறையான அங்கீகாரத்துடன் நடாத்திச் செல்லப்படும், வேறு வெளிநாடொன்றினால் ஏற்கப்படும் அல்லது சர்வதேச ரீதியில் மாற்று மருத்துவ முறை அல்லது பூரணப்படுத்தப்படும் மருத்துவ முறையொன்றை நிறைவேற்றப்பட்டுள்ள இயற்கை மற்றும் பொருத்தமான கோட்பாடுகளுடன் இணைந்த சிகிச்சை முறைகள், குணப்படுத்தும் சுகாதார சிகிச்சை முறைகளும்.

"உள்ளூர் மருத்துவ சேவையை வழங்குபவர்கள்" என்பது மருந்தாளர், பரிசோதகர், பஞ்சகர்ம சிகிச்சையாளர், மர்த்தனர் ஆகும்.

"உள்ளூர் மருத்துவ பதவி நிலைகள்" என்பது இலங்கையில் காணப்படும் பாரம்பரிய மருத்துவ முறைகள், அஷ்டாங்க ஆயுர்வேதம் சித்த மருத்துவம் யூனானி அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேற்று நாடுகளின் பாரம்பரிய மருத்துவ உத்தியோகத்தர்கள், அல்லது உள்நாட்டில் பயன்படும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் மருத்துவம், மணி மந்திர ஔடதம் வைத்தியம் செய்பவர்கள் பதிலீட்டு மருத்துவம் செய்பவர்கள் ஆகும்.

"உள்ளூர் மருத்துவ நிறுவனம்" என்பது இந்நியதிச் சட்டத்தின் 7ம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உபபிரிவின் கீழ் குறிக்கப்பட்டுள்ள விதமாக மாகாணத்தின் உள்ளூர் மருத்துவ திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தின் மற்றும் /அல்லது தனியார் துறையின் உள்ளூர் மருத்துவ வைத்தியசாலை, மருந்தகங்கள், இலவச ஆயுர்வேத மருந்தகங்கள், ஆரோக்கிய நீரூற்று மற்றும் நீராவி குளியல், பஞ்சகர்ம மருந்தகங்கள் மற்றும் உள்ளூர் மருத்துவ உற்பத்திசாலைகள் மருந்து உற்பத்தி உபகரணங்கள் விற்பனை நிலையங்கள் போன்றவை.

12- 102

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.